இன்பத்தின் எல்லையிலே நான்கொண்ட உறுதி
இல்லாது ஒழித்துவிட நீ எண்ணலாகும்!
இன்றில்லை யானாலும் எதிர்காலந்தனிலே
இனிமையொடு அறனிறைந்த வாழ்வுதிக்கு மென்ற
தனியர்ன் 'என்னுறுதி தகர்த்துவிடு' மெண்ணம்
சதிகார்ப் பாதகனே! நீ கொள்ளலாகும்.

அழிப்பது தானெப்படியோ? அதைச் சற்றே கூறு!
அதிர வைத்து உடல் துளைக்கும் துப்பாக்கிக் குண்டா?
இழி நகையாய்! அதனாலே பயனில்லை, போடா!
இன்னுயிரின் எடைக்கு அது ஈடாகுமோடா?

உரங்கொண்ட நெஞ்சத்தின் வலிமைமிக்க கவசம்
உடையதடா-என்னிடத்தே பிறந்திட்ட உறுதி!
உருக்குலைத்து உயிர்மூச்சாம் உறுதிதனைப் பிளக்கும்
உன்மத்த வெறிக்குண்டு எதுவுமில்லை, போடா!